# சொல் வகைகள்

## சொல்

பொருளை அறிந்து கொள்வதற்குக் கருவியாக இருக்கும் ஒலியே சொல்.

## சொல்லின் வகைகள்

சொல் **நான்கு** வகைப்படும் அவை ;

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

## பெயர்ச்சொல்

பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.

**சான்று** :- செல்வன், செல்வி, ஆசிரியர், மாணவன்.

## வினைச்சொல்

செயலை, இயக்கத்தை, தொழிலை உணர்த்தும் சொல் வினைச்சொல் ஆகும்.

**சான்று** :- பேசு, படி, நட, எழுது.

## இடைச்சொல்

பெயர்ச்சொல், வினைச்சொற்களை இடமாகக் கொண்டு வருவதனால் இதனை இடைச்சொல் எனலாம்.

**சான்று** :- உணவும் உடையும், நூலைப்படித்தான்

## உரிச்சொல்

பெயர், வினைச்சொற்களைச் சார்ந்து, அவற்றின் குணத்தை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும்.

**சான்று** :- நல்லரசு, மெதுவடை, அடர்ந்தகாடு.